(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE **24 UTM 102**

REG.NO:

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2024

பி.ஏ. தமிழ் இலக்கியம் **மதிப்பெண்கள் : 75**

முதல் பருவம் **நேரம் : 3 மணி**

பகுதி – 3

நன்னூல் - எழுத்ததிகாரம்

பகுதி – அ **(10x1=10 மதிப்பெண்கள்)**

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக **(K1)**

1. அறம் பொருள் இன்பம் வீடடைதல்
   (அ) வினைப்பயன் (ஆ) பிறவிப்பயன் (இ) நூற்பயன் (ஈ) முக்திப்பயன்
2. எழுத்திலக்கணத்தின் பகுதிகள் யாவை?
   (அ) 8 (ஆ) 12 (இ) 9 (ஈ) 10
3. பின்வருவனவற்றுள் எது பகுபத உறுப்புகளுள் ஒன்று?
   (அ) விகாரம் (ஆ) இடக்கரடக்கல் (இ) மங்கலம் (ஈ) உயர்திணை
4. தெங்கு நீண்டிற்று உயிர் மெய் எப்போது கெடும்?
   (அ) இயல்பில் (ஆ) காய்வரின் (இ) கனிவரின் (ஈ) இகரம்வரின்
5. கீழின்முன் வன்மை என்னவாகும்?
   (அ) விகற்பமாகும் (ஆ) இயல்பாகும் (இ) குறுகும் (ஈ) மறையும்

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க. (K2)

6. நூலின் வகைகள் யாவை?
7. ர, ழ எங்ஙனம் பிறக்கும்?
8. எதிர்கால இடைநிலை குறித்து நன்னூல் கூறுவது யாது?
9. விகாரப்புணர்ச்சி என்றால் என்ன?
10. குயின், ஊன் எனும் பெயர்கள் எங்ஙனம் புணரும்?

பகுதி – ஆ (5 x 5 = 25)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.(K3)

11. அ) பத்து வகைக் குற்றங்களை எடுத்துக் கூறுக.

(அல்லது)

ஆ) உரையின் இலக்கணத்தையும் வகைகளையும் பற்றி விளக்குக. **(த.பி.பா.)**

12. அ) ஐகாரக்குறுக்கம் , ஔகாரக்குறுக்கம் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) குற்றியலிகரம் பற்றி விளக்கிச் சான்று காட்டுக.

13. அ) ஓரெழுத்து ஒருமொழிகள் யாவை? விளக்குக.

(அல்லது)

ஆ) பகுபத உறுப்புகள் குறித்து எழுதுக.

14. அ) வினாச்சுட்டின் முன் நாற்கணமும் புணருமாற்றைக் கூறுக.

(அல்லது)

ஆ) பல சில வெனும் சொற்கள் எவ்வாறு புணருமென்பதைச் சான்றுடன் குறிப்பிடுக.

15. அ) லகர ளகர ஈறுகளின் புணர்ச்சி குறித்து நன்னூலார் கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) வருமொழித் தகர நகரத் திரிபு குறித்த நன்னூலாரின் கருத்தை எடுத்துரைக்க.

பகுதி – இ (5 x 8 = 40)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும். (K4& K5)

16. அ) முப்பத்திரண்டு உத்திகள் குறித்து விரித்தெழுதுக.

(அல்லது)

ஆ) சூத்திரம் பற்றி பவணந்தியார் விளக்குவனவற்றை எடுத்தியம்புக.

17. அ) எழுத்திலக்கணத்தின் பகுதிகளாக அமைவனவற்றைப் பற்றி விவரித்தெழுதுக.

(அல்லது)

ஆ) சார்பெழுத்தின் விரி எனும் பொருளில் கட்டுரைக்க.

18. அ) பதம் குறித்து விளக்கி அதன் வகையை விவரிக்க.

(அல்லது)

ஆ) நன்னூலார் கூறும் விகுதிகளைப் பற்றி விவரித்தெழுதுக.

19. அ) உயிரீற்றுச் சிறப்புப்புணர்ச்சி அமையுமாற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) திசைப்பெயர்களின் புணர்ச்சியைச் சான்று காட்டி விவரிக்க.

20. அ) மெய்யீற்றின் முன் உயிர் எழுத்துகள் புணரும் தன்மையினைச் சான்றுடன் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மெய்யீற்றுப் புணர்ச்சியில் மகர ஈற்றுப் புணர்ச்சி விதிகளை நன்னூல் வழி எடுத்தியம்புக.